பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 28 (12—8—68) திங்கள் ★ வெளியூர்: ஆடி 29 (13—8—68) செவ்வாய் [இதழ்: 50

தமிழகத்தில் அரிசி உற்பத்தி அதிகரிப்பு

புதுடில்லி, ஆக. 12—

தமிழகத்தில் சென்ற ஆண்டு உற்பத்தியான அரிசி 40,76,400-டன்களாக இருந்தது இந்த ஆண்டில் 42,91,300-டன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது; அதாவது சென்ற ஆண்டு உற்பத்தியை விட 2,14,900-டன்கள் அதிகம்.

இவ்வாண்டில் இந்தியாவின் அரிசி உற்பத்தி 3,78,58,100 டன்களாகும்; இது உயர்ந்த பட்ச அரிசி உற்பத்தியான

(4-ம் பக்கம் பார்க்க)

பிற நாடுகட்குச் சென்ற தமிழர்கள் இரத்தம் சிந்தி உழைத்தனர்

அந்நாடுகளின் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர்

உழைப்பினைப் பெற்று முன்னேறிய நாடுகள் இன்று அவர்களைத் தமிழகத்திற்கே திருப்பியனுப்புகின்றன

'சென்றவர்கள் திரும்புகிருர்களே' என்ற வேதனை நமக்கில்லை --- அவர்கட்கு வேலைவாய்ப்பு தருவதுதான் பிரச்சினையாக இருக்கிறது --- முதலமைச்சர் அண்ணு கனிவுரையும் வேண்டுகோளும்

சென்னை, ஆக. 12---

"உலகில் உள்ள நாடுகளிலேயே தமிழ்நாடு மிகப் பழைமைவாய்ந்தது என்பதும், பழைய கலாச்சாரத்தை உடையது என்பதும் உண்மைதான்! மற்ற நாட்டினர் கடலைத் தாண்டுவதற்குப் பயந்தபோதே தமிழகத்தைச் சேர்ந்த சோழ மன்னர்கள் கடல் கடந்து வியாபாரம் செய்தார்கள்! ஆனல், இந்த பழம்பெருமை பற்றியே 'தாலாட்டு'ப் பாடிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை!

"பிற நாட்டிற்குப் பொருட்களை ஏற்றுமதி செய்த தமிழகம், இடைக்காலத்தில் மக்களை ஏற்றுமதி செய்தது! தமிழர்கள் வெளிநாட்டிற்குச் சென்று தங்கள் இரத்தத்தைச் சிந்தி அந்த நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள்! அவர்களுடைய உழைப்பின் பயனை முன்னேறிய நாடுகள்---முன்னேற்றத்தை அடைந்தவுடன்---அவர்களைத் திருப்பித் தமிழகத்திற்கே அனுப்புகிறது! 'சென்றவர்கள்' திரும்புகிருர்களே என்று நமக்கு வருத்தம் இல்லை; ஆனல் வரக்கூடியவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் முக்கியப் பிரச்சினையாக இருக்கிறது; எனவே, வேலை வாய்ப்புகளை அதிகம் தேடிக் கொடுப்பதற்கான முறையில் விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் கவனம் செலுத்தவேண்டும்; பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து திரும்பி வரும் மக்களுக்கு வேலையளிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கும் இருக்கிறது.

"தோல் ஆராய்ச்சி நிலையங்களை விரிவுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கலாம்; தோல் ஏற்றுமதி செய்பவர்களுக்குத் தமிழக அரசு, தன்னல் இயன்ற வரையில் ஊக்கம் அளிக்கும். ஆராய்ச்சியினல் ஏற்படக்கூடிய பயன்கள் சாதாரண மக்களுக்குப் போய்ச் சேரும் அளவில் அவைகளைத் தொழிற்சாலையில் பயன்படுத்த வேண்டும்"

இவ்வாறுமுதலமைச்சர் அண்ணு அவர்கள், அடையாற்றில் உள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்தின் வெள்ளி விழாவினையொட்டிப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம், ஆராய்ச்சித் துறையில் பல பெரிய சாதனைகளைப் புரிந்திருக்கிறது.

ஆரம்பக் காலத்தில் வெளிநாடுகளுக்குத் தோல் சம்பந்தப்பட்ட பொருட்களை அப்படியே அனுப்பிவந்தோம்; இப்போது ஆராய்ச்சியின் பயனுகத் தோலை பதப்படுத்தி -- அதிலிருந்து பல வகையான பொருட்களைத் தயார் செய்து ஏற்றுமதி செய்கிருேம் — ஏற்றுமதியைப் பெருக்க மத்திய அரசு பல வழிகளைக் கையாண்டது; அதில் ஒரு வழியாக, ரூபாயின் மதிப்பு குறைப்பின் காரணமாக ஏற்றுமதி பாதிக்கப்பட்டது."

தமிழர்கள் மீது சிங்களத்தைத் திணிக்காதீர்

இலங்கை அமைச்சர் அறிவுறுத்தல்

கொழும்பு, ஆக 15—

"சிறுபான்மை மக்களிடம் பெரும்பான்மையினர் பரந்தமனப்பான்மை காட்டவேண்டும்"

என்று இலங்கைத் தொழில் அமைச்சர் பிலிப் குணவர்தனே கேட்டுக்கொண்டார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், 'போதுமான அவகாசம் அளிக்கப்படுமானல், இலங்கைத் தமிழர்கள் சிங்கள மொழியைத் தாமாகவே முன்வந்து கற்றுக்கொள்வர்' என்றும் கூறினர்.

"தமிழர்களின் விருப்பமில்லாத தொண்டை வழியாக சிங்களத்தைத் திணித்துவிட உங்களால் முடியாது; ஆகையால் அந்த முயற்சியில் ஈடுபடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்"

என்றும் அவர் சிங்களவர்களைக் கேட்டுக்கொண்டார்.

"நாம் எப்பொழுதும் பரந்த மனப்பான்மையுள்ளவர்களாகவே இருப்போம்" என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

டிட்டோ எச்சரிக்கை நிராகரிப்பு?

செக்கோஸ்லோவேகியா எல்லையில் மீண்டும் இரஷ்ய இராணுவ ஒத்திகை

'நிர்ப்பந்த நிலைமை கடுமையாகிறது' என யூகம்

மாஸ்கோ, ஆக. 12—

செக்கோஸ்லோவேகியாவுக்கு எல்லையில் இராணுவ ஒத்திகைகளை நடத்தப் போவதாகத் திடீரென்று இரஷ்யா அறிவித்திருக்கிறது.

சென்ற மாதம் இதுபோல் ஓர் ஒத்திகை நடைபெற்றுக்கொண்டு வந்தது இப்போதுதான் முடிவடைந்திருக்கிறது; அதன் தொடர்ச்சியாக இது நடைபெறுகிறதா என்பதோ எந்த இடத்தில் நடைபெறுகிறது என்பதோ தெரிவிக்கப்படவில்லை.

செக்கோஸ்லோவேகியாவும்—யூகோஸ்லேவியாவும் இணைந்து முன்னேற ஒத்துழைக்க வேண்டுமென்று இரு நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சிகளாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

மேலும், யூகோ அதிபர் டிட்டோ 'ஒரு சோஷலிச நாடு, இன்னொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது' என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்; இந்த நேரத்தில் இரஷ்யா இப்படி அறிவித்திருப்பது, 'மேலும் கட்டுத்திட்டத்தைத் தளர்த்தி செக்கோஸ்லோவேகியா நடவடிக்கை எடுக்காமல் நிர்ப்பந்திப்பதற்கேயாகும்' என்று மேற்கத்திய பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

கோழிக்கோடு, ஆக. 12—

கூடுதலான வசதிகளைக் கோரி, கடந்த வாரத்தில் மாணவர்கள் கிளர்ச்சி செய்ததைத் தொடர்ந்து, இங்குள்ள குருவாயூரப்பன் கல்லூரி, காலவரையறையின்றி மூடப்பட்டது. கல்லூரி நிர்வாகத்தினர் இம்முடிவை எடுத்தனர்.

'சட்டப்படி தண்டனைக்குரியது'

தேர்தலைப் புறக்கணிக்குமாறு கூறுவது பற்றி சாதிக்

ஸ்ரீநகர், ஆக. 12—

"இம்மாதம் 18-ம் நாள் நடைபெறவிருக்கும் சட்டமன்ற இடைத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு ஷேக் அப்துல்லா மக்களைக் கேட்டுக்கொண்டிருப்பது சட்டப்படி தண்டனைக்குரிய செயலாகும்"

என்று காஷ்மீர் முதலமைச்சர் சாதிக், பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

"தாம் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்ட நாளான ஆக. 9-ம் நாளில் அர்த்தால் செய்யுமாறு ஷேக் அப்துல்லா வேண்டுகோள் விடுத்திருப்பதில் நியாயமே இல்லை" என்றும் அவர் கூறினர்.

கழகத் தோழர்களுக்கு அறிவிப்பு

ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் நடைபெற்று முடிந்த வட்டக் கழகத் தேர்தல்களில், ஒரு சில வட்டங்களில் நடைபெற்றுள்ள தேர்தல்கள் குறித்துத் தலைமைக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள முறையீடுகளை, மாவட்டக் கழகத் தேர்தல் முடிந்த பிறகு தலைமைக் கழகம் முறைப்படி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை சம்பந்தப்பட்ட தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதுடன், தலைமைக் கழகம் ஏற்கனவே அறிவித்துள்ளவாறு மாவட்டக் கழகத் தேர்தல்கள் இனிதே நடைபெற ஒத்துழைக்குமாறு எல்லா அமைப்புகளின் நிர்வாகிகளையும், பிரதிநிதிகளையும், தோழர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கழகச் சட்ட திட்டப்படி -- பிரச்சினைகளுக்குத் தலைமைக் கழகமூலம் தீர்வு காண எல்லா வழிவகைகளும் இருப்பதால், கழகத் தோழர்கள் அந்த அடிப்படையிலேயே தங்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அதுதான் முறையுமாகும் என்பதையும் அன்புடன் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

---சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.

பொருளற்றுப் பேசுவதால் பயன்?

உண்மையை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள அச்சமேன்?

பல்வேறு வாழ்க்கைமுறை நிலவும் நாட்டில் நீண்ட நெடுங்காலம் உழைத்தால்தான் ஒருமைப்பாடு உருவாக இயலும்

தானாக வீறிட்டெழும் உணர்வுதான் இலட்சியத்திற்கு அடிப்படை — முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஆக. 12—

"தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் பற்றி அளவுக்கு அதிகமாக இன்றையத்தினம் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. 'தேசிய ஒருமைப்பாடு' என்ன என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

"உள்ளபடியே இந்த நாடு ஒருமைப்பாட்டுடன் இருக்குமானால், தேசிய ஒருமைப்பாடு இயக்கம் தேவையே இல்லை. 'ஒன்றுபட்டிருக்கிறோம் — ஒருமைப்பாட்டுடன் இருக்கிறோம்' என்று கூறும் அதே நேரத்தில், 'ஒருமைப்பாடு தேவை' என்று பேசுவது, பொருளற்றது! 'ஒரு நாடாக — ஒருமைப்பாடுள்ள ஒரு நாடாக மாற இருக்கிறோம் — அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்' என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

"இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் — பல்வேறு கலாச்சாரங்கள் — பல்வேறு வாழ்க்கைமுறை — சிந்தனைப் போக்குக் கொண்ட ஒரு நாட்டில், ஒருமைப்பாடு என்பது உடனடியாக ஏற்பட்டுவிடக் கூடியதல்ல; அதற்கு நீண்ட நெடுங்காலம் உழைத்தாக வேண்டும்.

"தேசிய ஒருமைப்பாடு என்பது — ஒரு மொழியைத் திணிப்பதாலோ, ஒரு கலாச்சாரத்தைத் திணிப்பதாலோ ஏற்பட்டு விடாது; அந்த உணர்வு தானாக வீறிட்டெழ வேண்டும்.

"ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினருடன் தொடர்புகொள்ளவும், மாணவர் — ஆசிரியர் போன்ற சமூகத்தின் பல பிரிவினர் நாடெங்குமுள்ள தம்மைப் போன்றோருடன் தொடர்புகொள்ளவும், கருத்துக்களைப் பரிமாறி ஒத்த கருத்தினராக உருப்பெறவும் தங்குதடையின்றி வாய்ப்பு ஏற்படும்போதுதான் ஒருமைப்பாடு ஏற்பட முடியும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜஸ்தான் இளைஞர் சங்கம் நடத்தும் புத்தகப் பாங்கித் திட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்.

நிலைமை மாறிவருகிறது

பாலர் அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், இராஜஸ்தான் இளைஞர் சங்கத்தின் புத்தகப் பாங்கியிலிருந்து மாணவர்களுக்குப் புத்தகம் வழங்கிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தக் காலத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இத்தகைய வசதிகள் கிடைத்துவருவது பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நாங்கள் படிக்கும் காலத்தில், 'கல்வி என்பது ஒரு சில மேட்டுக் குடியினருக்கு மட்டும் உரியது' என்ற நிலை இருந்தது; ஆயிரம் — இரண்டாயிரம் ரூபாய் எனச் செலவழிப்பவர்களுக்குத்தான் அந்தக் கல்விச் செல்வம் கிடைத்துவந்தது; அந்த நிலைமை இப்போது மாறிவருகிறது.

அரசு மட்டுமே செயல்பட்டால் இயலுமா?

கல்வியறிவு அதிகம் இல்லாத ஒரு நாட்டில் இப்படிக் கல்வித் துறை இருப்பது சனநாயகத்திற்கு விரோதமானது — நியாயத்திற்கு முரணானது!

'கல்வி' என்பது—சாதி, மத, பொருளாதார வேறுபாடுகளைக் கவனியாது அளிக்கப்பட வேண்டிய அடிப்படை — இன்றியமையாத் தேவையாகும்; இதனை நன்கு உணர்ந்து அரசு செயல்படுகிறது.

எனினும், அரசு சார்பில்லாத நிறுவனங்களும் இதுபோன்ற கல்விப் பணிகளில் ஈடுபட்டாலன்றி, கல்வித் துறையில் நாம் எந்தவிதமான முன்னேற்றத்தையும் அடைந்துவிட முடியாது.

நிறைவு செய்ய முடிந்ததா?

நமது அரசின் பொது வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கல்விக்கெனச் செலவழிக்கிறோம்; இருப்பினும், கல்வித் தேவையை நம்மால் நிறைவு செய்ய முடியவில்லை.

கல்வி ஆர்வமும், தேவையும் பெருகிவருவது மகிழ்ச்சியளிக்கக்கூடியது; எனினும், மிகுந்த பொறுப்பையும் அது நம்மீது சுமத்துகிறது; அந்தப் பொறுப்பைப் பங்கிட்டுக்கொள்ளத் தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

'புத்தகப் பாங்கி' என்னும் புது முறையை இராஜஸ்தான் இளைஞர் சங்கம் கொண்டுவந்திருக்கிறது.

பாங்கித் தொழிலில் இராஜஸ்தானியர் பெரும்பாலும் ஈடுபட்டிருப்பதாலோ என்னவோ — இதுபோன்று ஒரு யோசனை அவர்களுக்குத் தோன்றியிருக்கிறது.

பொருளாதாரத் தத்துவத்தின் ஓர் அங்கத் திட்டம்

'பாங்கி முறை' என்பது, பொருளாதாரத் தத்துவங்களில் ஒன்றாகும். பணம் ஓரிடத்தில சேர்ந்துவிடாமல் சமூகம் முழுவதும் சுழல்வதற்குப் பயன்படுவது பாங்கி.

'சமூகம் முழுவதும் பணம் சுழன்று வரவேண்டும்' என்பதற்காகத்தான் முன்பெல்லாம் ரூபாய் வட்டவடிவத்தில் இருந்தது; இப்போது அது சதுர வடிவத்தில் வந்திருக்கிறது!

இரத்தம் எப்படி உடல் முழுவதும் சுழன்றுவருவது உடலுக்கு ஆரோக்கியமோ — அதுபோல், பணம் சமூகம் முழுவதும் சுழன்றுவருவது சமூகத்திற்கு ஆரோக்கியமளிக்கக்கூடியதாகும்! அத்தகைய பாங்கி முறையில் புத்தகங்களை வழங்குவது பாராட்டத்தக்கதாகும்.

குறுகிய கால அட்டவணையால் பலன் கிடைக்க வாய்ப்புண்டா?

தேசிய ஒருமைப்பாட்டிலுள்ள அளவுக்கு மீறிய நம்பிக்கையின் உற்சாகத்தால் சிலர், குறுகிய கால அட்டவணை போட்டு முடிவை எதிர்பார்க்கின்றனர்; சூலையில் தொடங்கி ஆகஸ்டு 15-ஆம் நாளுடன் ஒருமைப்பாட்டு பணி முடிந்துவிட வேண்டுமெனக் கருதுகின்றனர்; அது இயலக் கூடியதா?

மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளில் நிலவும் வேறுபாடுகளை ஒரே நாளிலோ, அல்லது திட்டமிட்டோ நீக்கிவிட முடியாது என்பதை நிச்சயம் அவர்கள் உணரவேண்டும்.

எண்ணம் வழிகோலியது!

இராஜஸ்தான் இளைஞர் சங்கம், தமிழ்நாட்டு ஏழை மாணவர்களுக்கு உதவ ஏன் முன்வந்தது?—'ஏழை என்பவன் உத்தரப்பிரதேசத்திலிருந்தாலும், தமிழகத்திலிருந்தாலும் ஏழை ஏழைதான்; அவனுக்கு உதவுவது, நாட்டிற்கு உதவுவதாகும்' என்ற எண்ணம் தோன்றியதே—அதுதான், உண்மையான தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிகோலுவதாகும்.

நீண்டகாலப் பணிக்குப் பின்...

வெறும் மாநாடுகள் கூட்டுவதாலோ சொற்பொழிவுகள் ஆற்றுவதாலோ, கருத்தரங்குகள் நடத்துவதாலோ தேசிய ஒருமைப்பாடு ஏற்பட்டுவிடமுடியாது; 'மனித குலத்திற்கு நன்மைசெய்ய வேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களின் நீண்டகால சேவைக்குப் பின்னர்தான் தேசிய ஒருமைப்பாடு ஏற்படமுடியுமே தவிர, அரசியல்வாதிகளால் என்றும் ஏற்பட்டுவிட முடியாது.

இராஜஸ்தான் இளைஞர் சங்கம் இங்கு ஏற்படுத்தியுள்ள புத்தகப் பாங்கியைப்போல், தமிழகத்தின் பிற நகரங்களிலும் ஏற்படுத்தி, ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

திரைப் படக் கலைஞர்கள் மூலம் கிடைக்கும் வருமானம்......

'மக்கள் நல்வாழ்வுக்கே செலவிடப்படுகிறது'

'அவர்கட்கு மக்கள் தரும் பரிசு மதிப்பிட இயலாதது'

'திறம்பட நடித்து பெரும் புகழ் பெறுவர்' என அறிஞர் அண்ணா நம்பிக்கை

சென்னை, ஆக. 12—

"கலைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் வாழ்க்கையில் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையில் சிரமங்களை ஏற்றாலும், பொதுமக்களுக்கு நல்ல கருத்துக்களைத் தரக்கூடிய சிறந்த படங்களில் நடித்து நம்மையெல்லாம் மகிழ்விக்கின்றார்கள்; அவர்களுக்கு இதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் அவர்களுக்காக மட்டுமல்லாமல், நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் அளிக்கப்படுகிறது.

"சமுதாய வாழ்வில் அவ்வப்போது நெருக்கடிகள் தோன்றும்போது கலைஞர்கள் முன்வந்து தாராளமாக உதவிபுரிந்துவருவதைப் பார்க்கிறோம்; அந்த வகையில் அவர்கள் சமுதாயத்திற்குப் பயன்பட்டுவருவது பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

"அரசாங்கம் இத்துறையில் வரிகளின் மூலம் அதிகமான வருவாயைப் பெறுகிறது என்று கூறப்படுகிறது; அது உண்மையென்றாலும் அந்த வரிப் பணம், பொதுமக்கள் நன்மைக்காகவே செலவிடப்படுகின்றது; இதனை உணர்ந்து அவர்கள், மிகப் பெருமை அடைய வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், திரைப்படக் கலைஞர்களுக்குப் பரிசளிக்கும் விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

சினிமா ரசிகர்கள் சங்கச் சார்பில் 1968-ம் ஆண்டிற்கான சிறந்த திரைப்பட நடிகர் — நடிகையர், மற்றும் கலைஞர்கட்குப் பரிசளிப்பு விழா, நேரு கலையரங்கில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் அரசு வழக்கறிஞர் பு. ரா. கோகுலகிருஷ்ணன் வரவேற்றார்.

இவ்வாண்டிற்கான பரிசினை சிறந்த கலைஞர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிப் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"நம் நாட்டுக் கலைஞர்கள் வெளிநாட்டுக் கலைஞர்கள் போற்றிப் புகழும் வகையில் சிறந்த முறையில் நடித்துப் பேரும் புகழும் பெற வேண்டும்.

அந்த வகையில், கலைஞர்கள் திறமை மேலும் ஒளிர்விட வேண்டும்.

கலை உலகில் ஈடுபட்டு இங்கு பாராட்டுப் பரிசுகளைப் பெற்றவர்களுக்குக் கிடைத்த பரிசுகளின் மதிப்பு குறைவாக இருக்கலாம்; ஆனால், இங்கு பல்லாயிரக்கணக்கில் கூடியுள்ள மக்கள், மிகுந்த உற்சாகத்துக்கிடையே அளித்த பாராட்டும் பரிசுகளும் விலை மதிப்பில்லாதவைகளாகும் என்பதை உணர வேண்டும்."

இருதய நோய்க்கு அல்லிக் கொடி

குளம் குட்டைகளில் துளிர்க்கும் ஒருவகை அல்லிக் கொடிகள், இருதய நோயைத் தீர்க்கும் அற்புத ஆற்றல் வாய்ந்தவை என்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கோடைக்காலத்தில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள சோலான், ஆகென் என்னும் நகரங்களின் சுற்றுப்புறங்களில் இருக்கும் பள்ளத்தாக்குகளில் இத்தகைய அல்லிக் கொடிகள் ஏராளமாகத் துளிர்க்கின்றன; அவற்றின் இலைகளைப் பறித்து மூட்டை மூட்டையாக மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள்; அங்கு இந்த இலைகள் நனகு உலர்த்தப்பட்டு இருதய நோயைத் தீர்க்கும் மருந்தாக மாற்றப்படுகின்றன.

முதன் முயற்சி!

பென்சில்கள் எழுத எழுத கூர் தேய்ந்து தீர்ந்துவிடுகிறதல்லவா? பிறகு இதைச் சீவி மீண்டும் பயன்படுத்துகிறோம். சீவுவதற்கு 'பிளேடு' தேடவேண்டியிருக்கிறது இந்தத் தொல்லையில்லாமல் கூர் தீர்ந்துவிட்டால், வெங்காயம் உரிப்பதுபோல் இதன் தோலையும் எளிதாக உரித்து புதிய கூர் உண்டாக்கிக்கொள்ளலாம்.

பிரிட்டிஷ் நிறுவனமான ஈகிள் பென்சில் நிறுவனத்தின் இந்தத் தயாரிப்பு, உலகிலேயே முதன் முயற்சி என்று சொல்லப்படுகிறது.

தமிழகத்தின் பெருமை-செழுமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் காவிரி

நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்தே காவிரி வட்டத்தில் நீர்ப்பாசனம் உள்ளது

பண்டைக்காலம் முதல் நதிக் கரையையொட்டி வளர்ந்துள்ள நாகரிகம் குறித்து வரலாற்று ஆசிரியர்கள் பேசுகின்றனர்.

'தொன்மை நாகரிகத்தின் தொட்டில்கள்' என்று நதிகள் அழைக்கப்படுகின்றன. வள்ளல் பெருநதிகளால் நாடெங்கும் பசுமை பூக்கின்றன!

தமிழகத்தின் பெருமைக்கும் செழுமைக்கும் காவிரி ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நினைவுக்கு எட்டாத நெடுங்காலத்திலிருந்தே காவிரி வட்டத்தில் நீர்ப்பாசனம் உள்ளது.

காவிரியின் பாசன வசதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன; ஆனால் அதன் மின்வளம் அவ்வளவு பயன்படுத்தப் படவில்லை.

காவிரியில் மூன்று நீர் மின விசை நிலையங்களே உள்ளன; மைசூர் மாநிலத்தில் சிவனசமுத்திரம், ஷிர்ஷா ஆகிய இடங்களிலும்—தமிழகத்தில் மேட்டூரிலும் அவை உள்ளன; மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து 20,000, 25,000 கியூசெக் தண்ணீர் நீர்ப்பாசனத்திற்காக விடப்படுகிறது.

ஆனால், 2,000 முதல் 4,000 கியூசெக் தண்ணீர்தான் (40 மெகாவாட்) மின்விசை உற்பத்திக்காக விடப்படுகிறது; மீதித் தண்ணீரெல்லாம் மதகுகளின் வழியாகச் சென்றுவிடுகிறது.

மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு 600 அடிக்கு அப்பால் இடப் பக்கத்தில் ஓர் குடைவரையைத் தோண்டி—நீர்ப் போக்குவரத்தை அதன் வழியாகத் திருப்பி—ஒரு மின்விசை நிலையத்தைக் கட்டலாம் என்ற எண்ணம் எழுந்தது. இந்திய திட்டக் குழு, 1963-ல் இதை ஒப்புக்கொண்டது.

எனவே, இடக்கரையிலுள்ள மேசன்ரி நீர்த்தேக்கத்திற்கும்-எல்லிஸ் மதகுக்கும் இடையே ஒரு குடவரை தோண்டப்பட்டது. அது மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு 600 அடி அப்பாலும், எல்லிஸ் மதகுக்கு 100 அடி அப்பாலும் உள்ளது. எனவே, முன்பு மதகுகளின் வழியே சென்ற தண்ணீர், இப்பொழுது குடைவரையின் வழியாகவும், பெனஸ்டாக் குழாய்களின் வழியாகவும் சென்று, டர்பைன்களைச் சுழற்றுகிறது; இதன் விளைவாக, ஜனனிகள் இயங்குகின்றன.

மின்விசை நிலையத்தில் எஞ்சிய தண்ணீர் 408 அடி நீளமுள்ள சால்வாய் வழியாகக் காவிரியுடன் கலந்துவிடுகிறது.

மேட்டூர் குடைவரையைக் கட்டி முடித்ததும், மின்விசை நிலையத்தைக் கட்டும் பிரச்சினை எழுந்தது. பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்பு பற்றிய பிரேரணைகள் வந்தன. அன்றைக்கே மின்விசை உற்பத்தி உள்பட பற்பல முக்கியமான பொருளாதாரத் துறைகளில் இந்தியாவுக்குச் சோவியத் இரஷ்யா உதவிவந்தது.

மேட்டூர் மின்விசையின் வாயிலாக 35,000 விவசாய பம்பு செட்டுகளை ஓட்டலாம்; 1,40,000 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யலாம்; ஆண்டுதோறும் 2,00,000 டன் உணவுத் தானியத்தை விளைவிக்கலாம். இதைத் தவிர, பற்பல ஆலைகளுக்கும், வீடுகளுக்கும் மின்விசை வழங்கலாம்.

மாபெரும் மேட்டூர் மின்விசை நிலையத்தைக் கட்டிமுடிப்பதற்கு ரூ 16 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது; இதில், இயந்திரச் சாதனங்களின் விலை ரூ. 4 கோடி ஆகும்.

திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. அரசினர் கலைக் கல்லூரி

மேற்படி கல்லூரிப் பேரவைப் பெருமன்ற மாணவர் தலைவர் தேர்தல் 1—8—68-ல் நடைபெற்றது.

இத்தேர்தல், திருச்சி தி. மா. மு. க. தலைவர் இரா. சீனிவாசன் எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரைவிட 720 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

இதே நாளில் மேற்படி கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மன்றப் பேரவைத் தலைவர் தேர்தலில் தி.மா.மு.க. தோழர் பி. இராசா, அதிக வாக்குகள் பெற்று வெற்றி அடைந்தார்.

சென்னை 111-வது வட்ட கலைஞர் கருணாநிதி மன்றம்

மேற்படி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல், கோவி. இராசன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; அது போது. டி. விசுவநாதன் தலைவராகவும், இரா, கெங்காதரன் செயலாளராகவும், கே. எல். நாகையா துணைச் செயலாளராகவும், கே ஆர். கிருஷ்ணன் பொருளாளராகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

எண்ணூர் பவுண்டரீஸ் தி.மு.க.தொழிலாளர் குழு

சென்னை — எண்ணூர் பவுண்டரீஸ் தி.மு.க. தொழிலாளர் குழு தேர்தல், 5—8—68-ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர் : மு. விசயரங்கம்; செயலாளர் : த. ச. சேகர்; துணைச் செயலாளர் : ஏ. என். தயாபரவேலு; பொருளாளர் : ஐ. அந்தோணி; செயற்குழுவினர் : செயராமன், ஏ. வி. ரமணராவ், நாராயணன், கோவிந்தசாமி, மா. சம்பத், தனிஸ் லாஸ், சத்தியநாதன், மு. துரையரசன், இராசு, ஆறுமுகம், வேலாயுதம்.

சென்னை - வியாசர்பாடி கருணாநிதி பொதுப்பணி மன்றம்

மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் 4—8—68 ல் தோழர் பெ. தங்கரத்தினம் அவர்களை ஆணையாளராகவும்—தோழர் கோ. தமிழரசன் அவர்களைத் தலைவராகவும் கொண்டு நடைபெற்றது; தோழர்கள் மாரிமுத்து அவைத் தலைவராகவும், மரியான் செயலாளராகவும், சா மு வேல் துணைச் செயலாளராகவும், முருகேசன் பொருளாளராகவும், மற்றும் 7-பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

துணி துவைக்கும் தொழிலுக்கு முழுக்கு!

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள மகளிர், இப்பொழுதெல்லாம் துணிமணிகளை வீட்டில் துவைப்பதில்லை.

'அழுக்குத் துணிகளை யார் துவைததுக்கொண்டு உட்கார்ந்திருப்பது' என்று அவர்கள் அலுப்படைந்துவிட்டிருக்க வேண்டும்; எனவே, ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள சலவைக் கடைகளுக்கெல்லாம் யோக மடித்துவிட்டது!

கடந்த ஆண்டு மட்டும் 18 கோடி துணிமணிகள் மேற்கு ஜெர்மனியில் உள்ள சலவைக் கடைகள் வெளுத்துக் கொடுத்திருக்கின்றன!

கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 5 இலட்சம் டாலர்களை ஜெர்மன் மக்கள் சலவை செய்வதற்கு செலவிட்டிருக்கிறார்கள்!

ஜெர்மன் கூட்டாட்சி குடியரசில் சுமார் 11, 900 சலவைக் கடைகள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றால்....

கல்விச் சலுகை ரத்தாகுமாம்

கருத்தடைப் பிரசாரத்தில் மைசூர் அரசின் புதிய திட்டம்

கருத்தடைப் பிரசாரத்தில் ஆர்வம் காட்டும் மைசூர் அரசு, 'மூன்று குழந்தைகளுக்கு மேல் பெற்றால் கல்விச் சலுகை ரத்து செய்யப்படும்' என அறிவித்திருக்கிறது.

பள்ளிகளில் மாணவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன; அந்தச் சலுகைகளைப் பெறும் மாணவன் அல்லது மாணவியின் பெற்றோருக்கு, மூன்று குழந்தைகள் மட்டுமே இருக்கவேண்டும்; அதற்கு மேல் குழந்தை பெற்றால், அவர்களின் பிள்ளைகளுக்குக் கல்விச் சலுகைகள் ரத்துசெய்யப்படும் என்பது தான் மைசூர் அரசு அறிவித்திருக்கும் உத்தரவின் கருத்தாகும்.

ஒப்பந்தத்தில் பெற்றோர் கையெழுத்திட வேண்டும்

மைசூர் மாநிலத்தில் கல்விச் சலுகை கேட்பவர்கள், இனி அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். அந்த ஒப்பந்தப் பாரத்தில்,

"இதற்குமேல் குழந்தைகள் பெறமாட்டோம்; அப்படிப் பெற்றால், எங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகைகளை ரத்து செய்துவிடுங்கள்"

என்று எழுதி பெற்றோர்கள் கையெழுத்திட வேண்டும். இந்த ஒப்பந்தப் பாரத்தில், அரசுப் பதிவு பெற்ற அதிகாரி ஒருவரும் கையெழுத்திட வேண்டும்.

அரசின் மூலம் குறைந்த வாடகையில் குடியிருப்புகளைப் பெறுகின்றவர்களும், இதுபோன்று—'மூன்று குழந்தைகளுக்கு மேல் பெறக்கூடாது' என்றும் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

யேல் பல்கலைக் கழக ஆவணக் கருவூலத்துக்கு நாட் குறிப்பு நூல்

அண்ணா ஏற்பாடு -- கனவு நனவாகிறது

நியூஹேவன், ஆக. 12—

இந்திய அறிஞர்களுக்கும் — அமெரிக்க அறிஞர்களுக்கும் இடையே நிலவும் சில ஒத்துழைப்புக் காரணமாக, நெடுங்காலத்துக்கு முன்பு தமிழகக் கவர்னராக விளங்கிய யெலிஹு யேல் அவர்களின் நாட் குறிப்பு, அவரது பெயரைத் தாங்கி நிற்கும் பழமையான அமெரிக்கப் பல்கலைக் கழகத்துக்கு வந்திருக்கிறது.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் நேரடியாக உதவி செய்ததால், 'நாட் குறிப்பும், ஆலோசனை ஏடும்' என்னும் தலைப்பிலுள்ள இந்நூல், யேல் பல்கலைக் கழக ஆவணக் கருவூலத்துக்கு இரவலாக வழங்கப் பெற்றிருக்கிறது; அறிஞர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு இது துணைபுரியும்; நாட் குறிப்பின்மேல் அழகிய கையெழுத்தில் அதன் தலைப்பு எழுதப் பெற்றுள்ளது.

கி. பி. 1962-ம் ஆண்டில் எழுதப்பட்ட இந்த நாட் குறிப்பில், யேல் தாம் தமிழகக் கவர்னராகவும், கிழக்கிந்தியக் கும்பினித் தலைவராகவும் இருந்தபோது அன்றுடம் கண்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குற எழுதி வைத்திருக்கிறார்.

1718-ல் இந்த அமெரிக்கப் பல்கழகத்துக்கு யேல் பெயர் சூட்டப் பெற்றது; அப்போது எலிஹு யேல் அளித்த நன்கொடையால், பழமையான இந்தக் கல்வி நிலையம் கடனிலிருந்து விடுபட்டு இன்றுவரையில் சிறப்புற நடந்து வருகிறது.

இந்தியாவில் தற்போது அமெரிக்கத் தூதராக விளங்கும் செஸ்ட்டர் போல்ஸ் அவர்களுடன் 1924-ல் யேல் பல்கலைக் கழகத்தில் ஒரே வகுப்பில் படித்த எட்வார்டு எம். கிரீன் இந்த ஆண்டுத் துவக்கத்தில் சென்னை வந்து, தமிழக அரசு அலுவலகங்களில் ஆராய்ச்சி செய்தபோது, 276 வயதான இந்த நாட் குறிப்பு இருக்கக் கண்டார். 200 பக்கங்கள் கொண்டது; பட்டுத் துணி போர்த்திய மேலட்டை உள்ளது.

'சப் பெல்லோஷிப்' பெற்றுத் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கடந்த ஏப்ரல் திங்கள் யேல் பல்கலைக் கழகத்தில் தங்கிய போது, அவருக்கு வழித் துணைவராகப் பணியாற்றிய எட்வார்டு கிரீன், யேல் நாட் குறிப்பை இரவலாகப் பெறுவது குறித்து முதல்வருடன் பேசினார்.

கனவு நனவாயிற்று!

தமிழக அரசு நூலகத்திலிருந்து அதனை இரவலாகக் கொடுத்து உதவ முதலமைச்சர் இசைவு தந்தார். நாள் குறிப்பின் வரலாற்றுச் சிறப்புக்கு உரிய – தக்க பாதுகாப்புகளுடன் அதை விமானத்தில் அமெரிக்காவுக்குக் கொண்டு வர கிரீன் ஏற்பாடு செய்தார்.

இங்கிலாந்து – இந்திய உறவுகளில் கொந்தளிப்பான ஒரு காலத்தைப் பற்றிய விவரங்கள் யேல் நாட் குறிப்பில் இடம் பெற்றுள்ளன.

பிரிட்டிஷ் ஆட்சி தென்னிந்தியாவில் நிலைபெற்ற கதை—தமிழகத்தை முன்னாளில் ஆண்டுவந்தவர்களோடு கிழக்கிந்தியக் கும்பினியார் செய்துகொண்ட உடன்படிக்கைகள்—இந்திய நீதி பரிபாலன முறையில் தமிழ்நாடு இணைந்த விதம்—முதலிய தகவல்களும் நாள் குறிப்பில் காணப்படுகின்றன.

மருத்துவத் துறையில் மாபெரும் சாதனை!

வலியைப் போக்குவதற்குப் புதிய மருந்து கண்டுபிடிப்பு

வலி போக்குதல், ஒரு தனி விஞ்ஞானமாக உலகில் வளர்ந்துள்ளது; மருத்துவம் விஞ்ஞானிகட்கு வழிகாட்டவும், புதிய புதிய மருந்துகள் உற்பத்தி செய்யவும் ஏராளமான புதிய கருத்துக்கள் இன்று உண்டு.

புற்றுநோய் போன்ற வலியுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு டாக்டர்கள் நெடுங்காலமாக அபின், மார்பைன் போன்ற போதைப் பொருட்களையே நம்பி வந்துள்ளனர்; ஆனால் இதில் ஓர் ஆபத்து உண்டு; நோயாளிகள் இந்த போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிடும் ஆபத்தே அது; நோய் தீர்ந்தும் இவற்றை உட்கொள்ளும் பழக்கத்தை அவர்கள் விட முடிவதில்லை.

போதைப் பொருள் பழக்கம் பற்றி நியூயார்க் நகரிலுள்ள அமெரிக்க இரசாயன சங்கம் நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 'பென்ட்டசோசைன்' என்பது அதன் பெயர். அபின் முதலியவற்றிற்குப் பதிலாக இதைப் பயன்படுத்தலாம். இரு விஞ்ஞானிகள் இந்தப் புதிய மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியால் விளைந்துள்ள மற்றொரு முக்கியமான நன்மை, நீரிழிவு நோய் மருந்தான 'இன்சுலின்' செயற்கை முறையில் உற்பத்தி செய்தல்; இரசாயனத் துறையில் இது ஒரு பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

• வலி போக்குவதற்காகப் புதிய மருந்துகள் கண்டுபிடிக்கும் அமெரிக்க முயற்சிகள், மன நோய்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் நன்மை விளைவித்துள்ளன. பாலைவனக் கற்றாழை ஒன்றிலிருந்து தயாரித்த மெஸ்க்காலின் — ஒரு வகைக் காளானிருந்து தயாரித்த 'பெயோட்'—'சிலோசிபின்' ஆகியவை மன நோய்களைக் குணப்படுத்த விரிவாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இந்த மருந்துகளைக் கொடுப்பதில் பெரும் முன்னெச்சரிக்கை வேண்டும்; உரிய தகுதியில்லாதவர்கள் இவற்றைப் பயன்படுத்தினால், மிகுந்த ஆபத்து நேரிடும்.

'காந்தியாரின் கனவை நனவாக்க முயலுவோம்'

'ஊர்கள்தோறும் நினைவுச் சின்னமாக ஒன்றை நிர்மாணிப்பது அவசியம்'

அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 12—

"காந்தியாரின் கருத்துக்கள், சமுதாயத்தில்---வாழ்க்கையில் எதிரொலிக்க வேண்டும்; அவருடைய எளிமை---அன்பு நெறி--அருள் நெறி--அகிம்சை ஆகியவை சமுதாயத்தில் இடம் பெறவேண்டும்; ஆடம்பரத்தை ஒழிக்க வேண்டும்.

"சூடான சோறு---ஒழுகாத வீடு---கிழியாத ஆடை ஆகியவை இன்றியமையாத் தேவைகளாகும்; இவை எல்லா மக்களுக்கும் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

"காந்தியார் நூற்றாண்டு விழாவில் அவர் கண்ட கனவுகளில் சிலவாற்றையாவது நனவாக்க நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; ஓராண்டுக் காலத்துக்குள் இதை நிறைவேண்டும்; தங்களுடைய அறிவு--ஆற்றலைக் கொண்டு இத்துறையில் மாணவ--மாணவியரும், காந்தியார் நினைவாகப் பணியாற்ற இயலும்.

"1968 அக்டோபர் 2-ம் நாளிலிருந்து 1969 அக். 2-ம் நாள் வரை நடைபெறும் காந்தியார் நூற்றாண்டு விழாவின்போது, ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த அளவுக்காவது ஒரு திட்டத்தை நிறைவேற்றுமாறு ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றிப்புகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

"தமிழகத்தில் ஒவ்வொரு ஊரிலும்---ஒவ்வொரு ஊராட்சியிலும் பொதுமக்கள், சீரணியினர் அனைவருமே சேர்ந்து உடலுழைப்பு அல்லது பொருளுதவி செய்து, அந்த ஊருக்குத் தேவையான பள்ளிக்கூடமோ, மருததுவமனையோ---அல்லது திருமண மண்டபமோ---இவற்றில் ஏதாவது ஒன்றை, காந்தியார் நினைவுச் சின்னமாக நிர்மாணிக்க வேண்டும்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காந்தியார் நூற்றாண்டு விழாவையொட்டி திருவான்மியூரில் சென்னை நகர கல்லூரி மாணவிகளின் பயிற்சி முகாமைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு 'பைலி'ன் பின்னணியிலும் ஒரு மனிதன் இருப்பதை மறக்காதீர்!

அதிகாரிகட்கு தலைமைச் செயலாளர் அறிவுரை

குறைகளைத் தெரிவிக்கப் பொதுமக்களுக்கு வசதி அவசியம்

சென்னை, ஆக. 11—

"பொதுமக்கள் தெரிவிக்கின்ற நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும்—அந்தக் கோரிக்கைகள், ஊரைவிட்டு ஒதுங்கி இருக்கும் கிராமத்திலிருந்து வந்தாலும்—அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

"அதிகாரிகளிடம் வரும் ஒவ்வொரு 'பைலின்' பின்னணியிலும் ஒரு மனிதன் இருக்கிறன் என்பதை மறந்துவிடக்கூடாது.

"அவசரக் கோலத்தில் முடிவு செய்துவிட்டால், அதனல் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும். அவசரத்தில் காரியம் செய்கிற அதிகாரிகள் இதை கவனத்தில் கொள்ளவேண்டும்"

எனத் தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் சி. இராமகிருஷ்ணன், அதிகாரிகளுக்கு அறிவுரை கூறினர்.

பொதுமக்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை நீக்குவது சம்பந்தமான இரண்டு நாள் கருத்தரங்கு முடிவில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பொதுமக்களுக்குப் பேட்டியளிப்பதற்காக கலெக்டரோ அல்லது ஒரு உயர் அதிகாரியோ அலுவலக நேரத்தில் இருக்கவேண்டும். பொதுமக்கள், அலுவலக நேரத்தில்—எப்போது வேண்டுமென்ருலும்—தங்கள் குறைகளைத் தெரிவிக்க வசதி இருக்கவேண்டும்; இதற்கான உத்தரவு ஒன்று பிறப்பிக்க முடியும் என நம்புகிறேன்.

புகார்ப் பெட்டிகள்

"ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும், புகார்களைக் கவனிக்கும், 'கவுண்டர்' ஒன்று திறக்கப்படவேண்டும்; திங்கட்கிழமையன்று ஒரு அதிகாரி அந்தக் 'கவுண்டரி'ல் அமர்ந்திருந்து, மனுக்களையும் புகார்களையும் கவனிக்கவேண்டும்."

ஜோத்பூர் மருத்துவக் கல்லூரி

மூடிவிட அரசு முடிவு

ஜோத்பூர், ஆக. 12—

தங்கள் வேலைநிறுத்தத்தை மாணவர்கள் திரும்பப்பெறும் வரையில், ஜோத்பூர் மருத்துவக் கல்லூரியை மூடிவிட இராசஸ்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

ஆகஸ்டு 5-ம் நாளன்று மாணவர்கள், மனு ஒன்றில் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து மறு நாளே வேலைநிறுத்தம் செய்தனர்.

இதற்கிடையில், மாணவர் விடுதிகள் காலி செய்யப்படுகின்றன.

பர்துவான் பல்கலைக் கழகம் மூடப்பட்டது!

மாணவரிடை மூண்ட அமளியின் எதிரொலி

பர்துவான், ஆக. 12—

கால வரையறையின்றி பர்துவான் (மேற்கு வங்கம்) பல்கலைக் கழகம் மூடப்பட்டிருக்கிறது.

பல்கலைக் கழக மாணவர் விடுதியில் தங்கியுள்ளவர்கள், 24 மணி நேரத்திற்குள் அதைக் காலி செய்யுமாறு துணைவேந்தரால் உத்தரவிடப்பட்டுள்ளனர்.

இரு மாணவர் குழுக்களிடையே தகராறு ஏற்பட்டு அமளி நடைபெற்றதன் காரணமாக மாணவர்கள் பலர் காயமடைந்தனர்; அவர்கள், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் தான், பல்கலைக் கழகம் மூடப்பட்டது.

அரியபெருமானூர் தி. மு. க. பணிமனை திறப்பு

அமைச்சர் கோவிந்தசாமி எம். ஜி. இராமச்சந்திரன் பங்கேற்பு

14—8—68 மாலை 4-மணிக்கு வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ அவர்கள், அரியபெருமானூர் தி.மு.க. பணிமனையைத் திறந்துவைப்பார்; கொடியேற்றுபவர்: மு. அண்ணமலை; அறிஞர் அண்ண படத் திறப்பு: டி. கேசவலு எம்.எல்.ஏ.; வள்ளுவர் சிலைத் திறப்பு: கே. வேலாயுதம்.

தமிழகத்தில் அரிசி உற்பத்தி...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1964-ம் ஆண்டு உற்பத்திக்கு அடுத்தபடியான தாகுமெனத் தெரியவருகிறது.

சென்ற ஆண்டில் 3,04,37,900 டன் அரிசி உற்பத்தியாகியிருக்கிறது; இதைவிட இவ்வாண்டு உற்பத்தி 74,20,200 டன் அல்லது 24.4 சதவிகிதம் அதிகமான தாகும்.

இதுவரையில் உயர்ந்த அளவு உற்பத்தி ஏற்பட்டது 1964-ம் ஆண்டிலாகும் — 39 மில்லியன் டன்.

ஆங்கிலத்தை ஒதுக்கினுல்...

அண்ணு எச்சரிக்கை

சென்னை, ஆக. 12—

"எந்தத் துறையிலும் ஆங்கிலம் புறக்கணிக்கப்படக் கூடாது. ஆங்கிலம் அவ்வளவு சக்தி வாய்ந்த மொழி என்பதற்காகக் கூறவில்லை; அது, எதற்கும் வளைந்து கொடுக்கக்கூடிய மொழியாகும்.

"ஜெர்மன், பிரெஞ்சு போன்ற மற்ற மொழிகளைவிட ஆராய்ச்சித் துறையுடன் ஆங்கில மொழி அதிகத் தொடர்புடையது. ஒவ்வொரு மொழியிலும் கண்டுபிடிக்கப்படும் புதிய முறைகள், உடனுக்குடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

"எனவே ஆங்கிலத்தை வெறுக்கக் கூடாது. ஆங்கிலத்தை ஒதுக்கினுல், பல 'பொருள்'களை நாம் இழந்துவிடுவோம்!"

—(மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய வெள்ளி விழாவில்)

கோவை மாவட்ட தி. மு. க. தேர்தல்

18---8---68 காலை 10 மணி

கோவை மாவட்ட தி.மு. கழகத் தேர்தல் 18—8—68 காலை 10-மணிக்கு கோவை நகரக் கழகக் கட்டிடத்தில் ஆணையாளர் ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கோவை

மாவட்டத்தில்

திருப்பூர் பெருநகரம்
பொள்ளாச்சி வட்டம்
உடுமலை வட்டம்
ஈரோடு வட்டம்
அவினுசி வட்டம்

ஆகிய வடடங்களில் வட்டக் கழகத் தேர்தல்கள் 11-8-68, 13-8-68 அன்று முடிவதால் அவ்வட்டங்களில் உள்ள தோழர்கள் மட்டும் -- மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிட விரும்புகிறவர்கள் -- 15-8-68-க்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் விண்ணப்பத் தாள்களை முறைப்படி அனுப்பிவைக்க வேண்டும் என்பது இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப் படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வேலூர் வட்ட தி.மு.க. மறுதேர்தல் ரத்து

13-8-68 அன்று காலை ஆப்பூர் பயணிகள் விடுதியில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த வேலூர் வட்ட தி. மு. கழக மறுதேர்தல் இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதை இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிரும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

வேடசந்தூர் தி.மு.க. மறுதேர்தல் ரத்து

12--8--68 அன்று நடைபெறுவதாக இருந்த வேடசந்தூர் தி.மு.க. மறுதேர்தல் ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்பதை இதன் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

போளூர் வட்டத்தில்

போளூர் வட்டத்தில் நான்கு பாவட்டப் பிரதிநிதிகளை மட்டும் தேர்ந்தெடுக்கும் தேர்தல் 13--8--68 பிற்பகல் 2 மணிக்கு போளூர் நகர பயணியர் விடுதியில் ஆணையாளர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மாவட்டக் கழகத் தேர்தல்

14---8---68 காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி மாவட்டக் கழகத் தேர்தல்கள் முறைப்படி நடைபெறும்; மாவட்டம், இடம், ஆணையாளர் ஆகிய விவரங்கள் வருமாறு:---

மாவட்டம்	இடம்	ஆணையாளர்கள்
செங்கற்பட்டு	பயணியர் விடுதி, காஞ்சிபுரம்	வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல்.
திருச்சி	தமிழ்ச் சங்கக் கட்டிடம், மேலப் புலிவார் ரோடு, திருச்சி	மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி. (முன்னுள் மேயர்)
தஞ்சை	இராமநாதன் செட்டியார் மண்டபம்	நா. கணபதி பி.எஸ்சி.பி.எல்.
மதுரை	திருமண மண்டபம், ஆழ்வார் புரம், மதுரை	அ. பொ. அரசு எம்.எல்.ஏ., (முன்னுள் மேயர்)
தருமபுரி	பயணியர் விடுதி, அதமன்கோட்டை	கே. எம். கண்ணபிரான்
முகவை	பயணியர் விடுதி, மானமதுரை	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ.
நெல்லை	குறுக்குத்துறை, திருமண மண்டபம்	அப்துல் காதர் பி.எஸ்சி. (முன்னுள் மேயர்)

[மற்ற மாவட்டங்களின் விவரம் நாளை வெளிவரும்]

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கார் விபத்தில் பி. சிவசங்கரன்

தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறர்

சென்னை, ஆக. 11—

மக்களவை தி.மு.க. உறுப்பினர் திரு. பி. சிவசங்கரன் அவர்களும், திருவொற்றியூர் தி. மு. க. பொருளாளர் பார்த்தசாரதியும் அம்பத்தூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு வாடகைக் கார் மூலம் திருவொற்றியூர் சென்றுகொண்டிருக்கையில் மாதவரத்திற்கு அருகிலுள்ள இரட்டை ஏரி என்னுமிடத்தில் வாடகைக் காரும்—லாரியும் மோதிக்கொண்டன.

விபத்தில், பி சிவசங்கரனுக்குக் காயம் ஏற்பட்டிருக்கிறது; அரசினர் தலைமை மருத்துவமனையில் 11-வது வார்டில் சேர்க்கப்பட்டிருக்கிறர்.

கார் விபத்தில் எம். எஸ். இராமசாமி

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

9—8—68 பகல் 11-மணியளவில் டாக்சி ஒன்றில் திரு. எம்.எஸ். இராமசாமி அவர்கள் விருதுநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்; நகர் எல்லையில் உள்ள என்.சி.சி. அலுவலகத்திற்கு அருகில் திரும்பும்போது, பஸ் ஒன்றில் டாக்சி மோதியதால் விபத்து ஏற்பட்டது; கார் தீப்பற்றியது; என்.சி.சி. அலுவலகத்தினர் தீயை அணைத்ததுடன், முதலுதவியும் செய்தனர்,

திரு. எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு நெற்றியின் மேல் பகுதியில் பலத்த அடி -- தையல் போடப்பட்டுள்ளது; வலது காலில் பாதத்திற்குமேல் சற்று எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது

இச்செய்தி அறிந்த உடன் அருப்புக்கோட்டையிலிருந்து இராமநாதபுர மாவட்ட அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனர், நகர தி. மு. க. செயலாளர் ப. பெ. ந. நல்லதம்பி, அவைத் தலைவர் மு. க. இராமலிங்கம், பொருளாளர் சு. நடராசன், அருப்புகோட்டை வட்ட தி மு க. செயலாளர் மு. சுந்தரராசன், பொருளாளர் ஆ. குருசாமி, வட்டப் பிரதிநிதி க சிவராமன், மாவட்டப் பிரதிநிதி லெ. வேலுச்சாமி, தாவுதகான், முத்துராமலிங்கம் எம் சி., சாத்தூர் வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் இராசமாணிக்கம், பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ. வி. வி. இராமசாமி ஆகியோர் சென்று சிகிச்சைக்கான ஒத்துழைப்பில் ஈடுபட்டதுடன் ஆறுதலும் கூறினர்.

திரு. எம். எஸ். இராமசாமி அவர்கள், விருதுநகரிலிருந்து ஆம்புலன்சுமூலம் மதுரை அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

டாக்சியிலிருந்த கோவிந்தசாமி -- மற்ற இருவரும், டிரைவர் சின்னப்பனும் சிறிது காயமடைந்தனர்; மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நடக்க இருப்பவை

14--8--68

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ஷேக் மேஸ்திரி தெருவில் (காவல் நிலையத்திற்கு அருகில்); தலைவர்: கே. சாரங்கபாணி: பேசுவோர்; ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., நா. வீராசாமி எம்.எல்.ஏ., மு.வேதாசலம் எம் எல்.ஏ., மா. செங்குட்டுவன், எம். குமார், வி. டி. அரசு, வி. சுந்தரமூர்த்தி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]